07.01.2026

O.S.No.93/2023

வா.சா.1.திரு.சதக்கத்துல்லாஹ், த.பெ.திரு.வரிசை முகமது.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

நான் 10 ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் தற்போது டீக்கடையில் வேலைப்பார்க்கிறேன். இந்த வழக்கு என்ன பரிகாரம்கேட்டு தாக்கல் செய்துள்ளேன்என்றால் எனது அப்பா வரிசை முகமது என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பா 1993ம் ஆண்டு களிமங்கலம் ஊரில் வைத்து இறந்தார். களிமங்கலம் தற்போது மதுரை கிழக்கு தாலுகாவில் வரும். எனது அப்பாவிற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு மதுரை கிழக்கு தாலூகாவில் மனு கொடுத்தேன். 2022ம் ஆண்டு என்று நினைக்கிறேன். எனது அப்பா இறந்து 30 ஆண்டுகள் கழித்து வாரிசு சான்றிதழ் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி எனது அம்மா உம்மசல்மா ஆவார். இரண்டாவது மும்தாஜ் பேகம் ஆவார். எனது தாயார் எந்த வருடம் இருந்தார் என்றால் நான் பிறந்த அன்றே மாலை இறந்துவிட்டார் அதாவது 1968ம் ஆண்டு இறந்துவிட்டார். எனது அம்மாவின் இறப்பு சான்றிதழ் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டாவது மனைவியான மும்தாஜ் பேகம் என்பவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளது. 1. சபுராபீவி, 2.சாலியாபீவி, 3.அலாவூதின் ஆகியோர் ஆவர். எனது அப்பா வரிசை முகமது தாய் பெயர் சுலைமான் பீவீ ஆகும் தந்தை பெயர் நைனா முகமது ஆகும். சுலைமான்

பீவி, நைனா முகமது ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள். சுலைமான் பீவி, நைனா முகமது ஆகியோர்கள் இறப்பு சான்றிதழ் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுலைமான் பீவி, நைனா முகமது ஆகியோர்கள் இறந்துவிட்டனர் என்ற விவரத்தினை வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் முறையான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால் இந்த வழக்கு 1, 2 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.